★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHNOE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✯ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 18உ சனி (3—11—56) ★ ★ வெளியீடு: ஐப்பசி 19உ ஞாயிறு (4—11—56) [இதழ் 125

சுரங்க விபத்துக்களுக்கு முற்றுப்புள்ளி?

அணுக்கதிரியக்க 'ஐசடோப்பு'களைக் கொண்டு வருங்காலத்தில் சுரங்கங்களின் அடியில் ஏற்படும் ஆபத்துகளைத் தடுக்க ஜப்பானியச் சுரங்க இலாகா முயற்சி செய்யும். மேல்மட்டத்துத் தண்ணீரிலும், சோதனை செய்ய வெட்டிய குழிகளிலும் அணுக்கதிரியக்கப் பொருள்கள் ஊற்றப்படும். அது தரைக்குள் இறங்கும்போது, மேலே உள்ள குட்டைகளையும் வெடிப்புகளையும் காட்டும். வெள்ளம் வரக் கூடிய இடங்களையும், படுகுழிகளையும் இவ்வாறு கண்டு கொள்ளலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். இது 20 சுரங்கங்களில் சோதனை செய்து பார்க்கப்படும். சோதனை வெற்றி பெறுமாயின், எல்லாச் சுரங்கங்களிலும் இது பயன்படுத்தப்படும்.

'பலமுறை காவடி எடுத்தேன்; தோல்வியுற்றேன்'

அசட்டையாயிருக்கவில்லை; அரும்பாடு பட்டேன்'

டில்லியில் பெற்ற தோல்வி குறித்து மந்திரி சுப்பிரமணியம்

செங்கோட்டையைப் பறிகொடுத்த பரிதாபம் பற்றி விளக்கம்

தென்காசி, நவ. 2—

"செழிப்பான காட்டுப் பிரதேசங்கள் செங்கோட்டையுடன் சேர்க்கப்படாமல் விடப்பட்டுவிட்டது. செங்கோட்டைக்கு ஐந்து மைல் தொலைவில் புலியானுவில் எல்லை நிர்ணயிக்கப்பட்டதிலும், சென்னை சர்க்கார் அசிரத்தையாயிருந்து, சில பகுதிகளை இழந்துவிட்டனர். இந்த நஷ்டங்களுக்கு முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டியவர்கள் சென்னை சர்க்காரேயாகும்,"

என்று செங்கோட்டையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தமிழ் நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் எல். எஸ். கரையாளர் குற்றம் சாட்டினார்.

பின்னர், அதே கூட்டத்தில் பேசிய சென்னை நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் கூறியதாவது:—

"செங்கோட்டைப் பிரிவினையில், சென்னை சர்க்கார் அசிரத்தையாயிருந்ததாக, திரு. கரையாளர் எழுப்பியுள்ள குற்றச்சாட்டினை மறுக்கிறேன்.

"இது விஷயத்தை மத்திய சர்க்காரிடம் எடுத்துக்கூற நான் பலமுறை டில்லி சென்றேன். ஆனால் இதில் தோல்வியுற்றேன். என்றாலும், இந்த விஷயமாக சென்னை சர்க்கார் இன்னமும் கிளர்ச்சி செய்துவருகின்றனர். சிக்கிரமே நோக்கம் கைகூடும் என்று நம்புகிறேன்."

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய நீதிக் கட்சித் தலைவர் சர். பி. டி இராசன் அவர்கள், சென்னை மாநிலத்தில் செங்கோட்டைத் தாலுகா முழுவதும் சேர்க்கப்படவேண்டும் என்று மாநிலப் புது அமைப்புக் குழுவினரே சிபாரிசு செய்திருந்ததையும், அதிலும் பாதியை சென்னை சர்க்கார் பறிகொடுத்துத் திரும்பியதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

'சென்னை சர்க்காரின் தவறால் செங்கோட்டைப் பகுதியை இழந்தோம்'

சென்னைக் கூட்டத்தில் குற்றச்சாட்டு

சென்னை, நவ. 2—

"சென்னை சர்க்கார் செய்த தவறின் விளைவாக செங்கோட்டையில் பாதி பறிபோயிற்று.

"இதர மாநில சர்க்கார்களைப் போல, சென்னை சர்க்காரும் டில்லியுடன் போராடத் தவறியதின் விளைவாகத்தான், நெய்யாற்றின்கரை, கோச்சின்—சித்தூர், தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள் தமிழகத்திற்கு இல்லாமற்போயின.

"மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில், பத்மனுபபுரம் அரண்மனையைக்கூடப் பெற முடியாத சென்னை சர்க்கார், அதனைக் கேரளத்திற்குத் தந்துவிட்டிருக்கின்றனர். எனவேதான், புதிய தமிழ் நாடு அமைகிற இந்நாள் மகிழ்ச்சிக்குரிய தாலும், கவலைக்கும் ஏமாற்றத்திற்கும் உரிய நாளாகவும் உள்ளது"

என்று, மக்கள் முன்னேற்றக் கட்சித் தலைவர் செல்லசாமி என்பார், சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

'காசர்கோடு பகுதி கேரளத்தில் இணைக்கப்பட்டது ஜனநாயகத்திற்கு இழைக்கப்படும் தீங்கு ஆகும்'

விஷயத்தை தேர்தல் பிரச்சினையாக்க முடிவு

மங்களூர், நவ. 1—

"காசர்கோடு தாலுகாவின் ஒரு பகுதியை—சந்திரகிரி ஆற்றுக்கு வடக்குப் பகுதியை கேரளத்துடன் இணைத்திருப்பதானது, ஜனநாயகத்திற்கு இழைக்கப்படும் தீங்காகும்"

என்று, கார்காத் என்ற கர்நாடகப் பிரஜா சோஷலிஸ்டு தலைவர் வர்ணித்துள்ளார்.

'இந்தப் பிரதேசம், கன்னட மொழிப் பிரதேசம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்,' என்றும், 'இதனை வலியுறுத்த கர்நாடக சாகித்திய பரிஷத், கர்நாடக ஏகிகரன் பரிஷத் ஆகியவை, காசர்கோடில் நடந்த 1947-ம் ஆண்டு கூடி முடிவெடுத்துள்ளன' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"இந்தப் பிரதேசம் கேரளத்துடன் இணைக்கப்படுவதற்கு மக்கள் காட்டிய எதிர்ப்பை மதித்து மத்திய சர்க்கார் நடந்திருக்க வேண்டும்"

என்றும் அந்தப் பி. சோ. தலைவர் எடுத்துரைத்திருக்கிறார்.

காசர்கோடு கர்நாடக பரிஷத் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையிலேயே கார்காத் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், வரப்போகும் பொதுத் தேர்தலில் காசர்கோடு பிரதேசத்தில் கட்சிப் பற்றற்றவர்களை நிறுத்திவைத்து, கன்னடரின் குரல் கேரள சட்டசபையிலும், டில்லி மக்கள் சபையிலும் கேட்குமாறு செய்யவேண்டுமெனவும் பரிஷத், தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது எனத் தெரியவருகிறது.

நேரு குடும்பத்தைப் பின்பற்றியோர்!

மத்தியப் பிரதேசத்தில், தம்பதிகள் அமைச்சர்களாகின்றனர்!

போபால், நவ 3—

புதிய மத்தியப் பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள மந்திரி சபையில் கணவனும் மனைவியும் மந்திரிகளாயுள்ளனராம்! வேடிக்கை என்னவெனில், கணவன் உதவி மந்திரி! மனைவி மந்திரி!

ராஜா வீரேந்திர பகதூர் சிங் உதவி மந்திரியாகவும், அவரது மனைவி ராணி பத்மாவதி தேவி மந்திரியாகவும் உள்ளனராம்

உங்கள் குறிப்புக்கு!

செங்கோட்டை தாலுகாவை கன்னியாகுமரி மாவட்டத்துடன் சேர்க்க சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகர் நாகர்கோவில் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கவர்னர்களுக்கு ஆயிரக்கணக்கில் அலவன்சு தரப்படும்!

குடியரசுத் தலைவர் புதிய உத்தரவு

மேசை, நாற்காலிகளுக்கு மட்டும் பம்பாய் கவர்னருக்கு ரூ. 1 இலட்சமாம்!

புதுடில்லி, நவ 3—

புதிய மாநிலங்களின் கவர்னர்கள் பலருக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய் அலவன்சு தருமாறு, குடியரசுத் தலைவர் உத்தரவு ஒன்று பிறப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

பம்பாய் கவர்னருக்கு நவம்பர், டிசம்பர் ஆகிய இரு மாதங்களுக்காக மட்டும் ரூ. 68,400 அலவன்சாகத் தருமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறதாம்.

கார் வைத்துக் கொள்வது உட்பட பலவகைச் செலவுக்காக ரூ. 24,000; இராணுவச் செயலாளர்—அவர் பரிவாரங்களுக்காக ரூ. 20,000; பிரயாணச் செலவு ரூ. 12,000; இருப்பிடச் செலவு ரூ. 4,000; வைத்தியர் ரூ. 3,600; பொழுதுபோக்குச் செலவு ரூ. 800—என்று, அந்த 68,000 ரூபாய்க்கும் கணக்குக் கூறப்பட்டிருக்கிறது.

அடுத்தாற்போல, சென்னை கவர்னருக்கு ரூ. 67,800 ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்!

இது தவிர, ஆந்திரப் பிரதேச கவர்னருக்கு ரூ. 46,800; மத்தியப் பிரதேச கவர்னருக்கு ரூ. 42,800; மைசூர், இராஜஸ்தான் கவர்னர்களுக்கு ரூ. 40,800; பஞ்சாப் கவர்னருக்கு ரூ. 34,800; கேரள கவர்னருக்கு ரூ. 34,200-என்று, பல்லாயிரக் கணக்கில் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்!

இதுவன்னியில், பம்பாய் கவர்னருக்கு, பம்பாயிலும் பூனாவிலும் உள்ள மாளிகைகளில் மேசை, நாற்காலி, கட்டில் முதலியன வாங்கிக் கொள்வதற்காக ரூ. **1,13,000** வரை ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்!

இதுபோல சென்னை கவர்னருக்கு ரூ. **70,000**; பஞ்சாப் கவர்னருக்கு ரூ. **10,000** அளிக்கப்பட்டிருக்கிறதாம்!

20-இலட்சம் டன் உணவுப் பொருள்

எப்போதும் தயாராக இருக்குமாம்

சேமித்துவைக்க களஞ்சியங்கள் அமைகின்றன

20 இலட்சம் டன் உணவுத் தானியங்களை எப்போதும் கையிருப்பில் வைத்திருப்பது இந்தியாவின் இலட்சியமாகக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வளவு ஏரானமான தானியத்தைச் சேமித்து வைத்துக் கெடாமல் பாதுகாத்து வருவதற்காக, நாடு முழுவதிலும் பல முக்கிய இடங்களிலும் கிடங்குகளை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மொத்தம் 2,10,000 டன் தானியங்களைச் சேமித்து வைப்பதற்கு வேண்டிய கிடங்குகள் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டு உபயோகத்தில் இருந்துவருகின்றன; இவற்றில் பெரும் பகுதி பம்பாயிலும் கல்கத்தாவிலும் உள்ளன.

ஒரு இலட்சம் டன்னுக்கு அதிகமாகக் கையிருப்பில் வைத்திருக்கப்போகும் மாநிலங்களில் பம்பாய், சென்னை, மத்திய பாரத், ஒரிசா, மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம், ஐதராபாத், திருவாங்கூர்—கொச்சி ஆகியவை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவையாகும். புதிதாக அமைக்கப்படும் கிடங்குகள், அந்தந்தப் பகுதிகளின் தேவைகளைப் பொறுத்து, 15,000 டன்னிலிருந்து 1,25,000 டன்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 3—11—56 சனி

'ஈடன் யுத்தம்!'

'பதில் தாக்குதல்' எனப் புகல் கூறிக்கொண்டு இஸ்ரேல் எகிப்து மீது போர் தொடுத்திருக்கிறது. அப்படிப் போர் தொடுத்த இருபத்திநான்கு மணிக்குள்ளாகத் தனது நாட்டின் எல்லையிலிருந்து நூறு மைல் எகிப்து நாட்டுக்குள் ஊடுருவிச் சென்று இருக்கிறது இஸ்ரேல் படைகள்.

திட்டமிடப்பட்ட மின்வேகத் தாக்குதலாக இருந்தாலல்லாது, போர் தொடுத்த ஒரு நாளைக்குள் எதிரி நாட்டில் நூறு மைல் தொலைவு செல்லுவது என்பது சாத்தியமல்ல. எனவே, எகிப்துமீது இஸ்ரேல் தொடுத்துள்ள போரை, அது கூறுவதே போன்று 'பதில் தாக்குதல்' என எவராலும் கொள்ளமுடியாது.

எகிப்துமீது இஸ்ரேல் தொடுத்துள்ளது அக்கிரமப் போராகும் எனக் கண்டனம் கிளம்பிக் கொண்டிருக்கும் நேரத்திலேயே, அதை ஒரு காரணமாகக் கூறிக்கொண்டு, பிரிட்டனும் பிரான்சும் கூட்டாகச் சேர்ந்து எகிப்துமீது போர் தொடுத்து விட்டன. இஸ்ரேலின் அநீதியான தாக்குதலுக்கு ஆளாகி, அதை எதிர்த்துத் தற்காத்துக் கொள்ள வேண்டிய ஒரு நெருக்கடியான நிலையில் சிக்கி, தற்காப்புப் போரில் ஈடுபட்டிருக்கின்ற எகிப்துமீது, பிரிட்டனும் பிரான்சும் கூட்டாகச் சேர்ந்து போர் தொடுக்க முன்வந்திருக்கிறது என்றால், அதை உலக வரலாறு கண்டறியாத புதுவகையான ஏகாதிபத்திய வெறிச்செயல் என்றுதான் சொல்ல வேண்டும்.

எகிப்து நாட்டின் சொத்தான சூயஸ் கால்வாய் பகுதியை, அதனிடமிருந்து பறித்து மீண்டும் தனது வசமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற கெடு நினைப்பு கொண்டுள்ள பிரிட்டன், அதை எப்படியும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, எகிப்தைத் தாக்கும்படி இஸ்ரேலைத் தூண்டி இருந்தாலும் இருக்கலாம் என்றுகூட, பிரிட்டனின் வெறிச்செயல் பொருள்படுவதாக இருக்கிறது. அதுவுமன்றி இஸ்ரேல்—எகிப்து ஆகிய இருசாராரும் உடனே போரை நிறுத்த வேண்டும் என்றும், இஸ்ரேல் நாட்டுக்கு எவரும் உதவி செய்யக்கூடாது என்றும், ஐக்கிய நாட்டு சபை கட்டளையிட்டாலன்றி எந்த நாடும் தாமாக நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றும், ஐ. நா. சபையில் அமெரிக்கா கொண்டுவந்த ஒரு தீர்மானத்தை, தங்களுக்குள்ள 'நிராகரிப்பு' அதிகாரத்தைக் கொண்டு பிரிட்டனும் பிரான்சும் தோற்கடித்து விட்டதானது, இஸ்ரேல் தாக்குதலில் தோன்றக்கூடிய மேல் குறித்துள்ள ஐயத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது.

அவ்வாறு தோற்கடித்த அளவுடனும் பிரிட்டனும் பிரான்சும் இருந்துவிடவில்லை. எகிப்தும் இஸ்ரேலும் போரை நிறுத்தவேண்டும்; இஸ்ரேலியப் படைகள் முன்னுள் எல்லைக்குத் திரும்பவேண்டும்—என ரஷ்யா கொண்டுவந்த தீர்மானத்தையும், பிரான்சும் பிரிட்டனும் தோற்கடித்துள்ளன.

ஐக்கிய நாடு சபை தோன்றிய காலந்தொட்டு 'நிராகரிப்பு' அதிகாரத்தை ஒருமுறையேனும் பயன்படுத்தி அறியாத பிரிட்டன், மேற்படி இரண்டு நியாயமான தீர்மானங்களையும் தோற்கடிப்பதில் பயன்படுத்தி இருப்பதானது இஸ்ரேலைத் தூண்டிவிட்டுப் போரிடச் செய்து, அதை ஒரு காரணமாகக் காட்டி, எகிப்து மீது போர் தொடுத்து சூயசை மீண்டும் கைப்பற்றுவது என பிரிட்டன் திட்டமிட்டுச் செய்துள்ள முன்னேற்பாடு என்பதையே வலியுறுத்துவதாக அமைந்திருக்கிறது.

பிரிட்டனின் தூண்டுதலினாலேயே இஸ்ரேல் எகிப்துமீது தாக்குதல் நடத்தி வருகிறது என எண்ணுவதற்குச் சாதகமான மற்றொரு காரணமும் இருக்கிறது. அதாவது, சூயஸ் கால்வாய் பகுதியில் இருந்து எகிப்து—இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளின் படைகளும், எச்சரிக்கை கிடைத்தப் பன்னிரண்டு மணி நேரத்திற்குள் காலி செய்து வெளியேற வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில், தாங்கள் இருவரும் கூட்டாகச் சேர்ந்து சூயஸ் கால்வாயை மீண்டும் பிடித்துக்கொள்வோம் என்றும், பிரிட்டன் எகிப்து நாட்டை எச்சரித்து இருப்பதும், இஸ்ரேல் தாக்குதலில் பிரிட்டனுக்குள்ள பங்கை வெளிப்படுத்தக் கூடிய மற்றொரு காரணமாகும்.

பிரிட்டிஷ் பிரதமர் ஈடனின் அக்கிரமப் போரை உலகமே கண்டிக்கிறது. அதுவுமல்லாது, பிரிட்டிஷ் மக்களும், தங்கள் பிரதமரின் வெறிச்செயல் கண்டு வெட்கமும் வேதனையும் கொண்டுள்ளனர்.

ஆட்சிப் பொறுப்பில் இருந்து வரும் ஈடனின் கன்சர்வேடிவ் கட்சியிலும்கூட, பிரதமரின் அக்கிரமத்திற்கு முழு ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை. கன்சர்வேடிவ் கட்சியின் ஏடான 'மான்செஸ்டர் கார்டியன்'கூட, ஈடனின் வெறிச்செயலை 'ஈடன் யுத்தம்' எனப் பெயர் கொடுத்து சித்தரித்து இருக்கிறது.

பனிக்கட்டி உடைக்கும் அணுசக்தி கப்பல்!

உலகிலேயே முதன்முதலாக ரஷ்யாவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அணுசக்தியால் இயங்கும் பனிக்கட்டி உடைக்கும் கப்பலின் வேலை வெகுவேகமாக இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறதாம்!

16,000 டன் நிறையுள்ள இந்தக் கப்பல் 44,000 குதிரைத் திறனுடைய சக்திமிக்க எஞ்சினுல் ஓட்டப்படுமாம்! எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் இந்தக் கப்பலால் நிற்காமல் செல்லமுடியுமாம்! ஒரு தடவை எரிபொருளை நிரப்பிவிட்டால், மீண்டும் எரிபொருளை நிரப்பிக்கொள்ள வேண்டிய அவசியமில்லாமலேயே, இரண்டு வருஷங்களுக்கும் பிரயாணம் செய்ய இக்கப்பலால் முடியுமாம்!

குடும்பக் கட்டுப்பாடு

மாநிலங்களில் அதிகாரிகளை நியமிக்க மத்திய ஆட்சியினர் மானியம் அளிக்கின்றனர்

புதுடில்லி, அக். 31—

ஒவ்வொரு மாநிலத்திலும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு மாநில அரசுகளில் அதிகாரிகளை நியமிப்பதற்கு மத்திய அரசாங்கம் மானியம் அளித்துள்ளது.

பரிசீலனை செய்யப்பட்டபின், தனிப்பட்ட நிறுவனங்களுக்கு மத்திய அரசாங்கம் உதவியளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

10,000 கிராமங்கட்கு மின்சார வசதி

சில புள்ளி விவரங்கள்

புதுடில்லி, நவ. 1—

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 20,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 585 நடுத்தர நகரங்களுக்கும், 550 நகரங்களுக்கும் மின்சார வசதியளிக்கப்பட்டதாம்.

10,000 முதல் 20,000 வரை மக்கள் தொகையுள்ள 856 நகரங்களில், 350 நகரங்களுக்கு மின்சார வசதியளிக்கப்பட்டதாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 10,000 கிராமங்களுக்கும், 500 சிறிய நகரங்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்படுமாம்.

44 மின்சார உற்பத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ 427 கோடியில், ரூ. 75 கோடி சிறு நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் மின்சார உதவியளிப்பதற்கென ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

கன்னியாகுமரி மாவட்டம்

மேலும் இரண்டு தாலுகாக்களை இணைக்க சென்னை யோசனை ?

தென்காசி, அக். 31—

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டு தாலுகாக்களைச் சேர்ந்த தென்காசி, சங்கரநயினார் கோயில் ஆகிய இரண்டு தாலுகாக்களையும், நான்கு தாலுகாக்களைக் கொண்ட புதிய கன்னியாகுமரி மாவட்டத்துடன் சேர்ப்பதற்கு, சென்னை அரசாங்கம் யோசித்து வருவதாகத் தெரிகிறது.

தென்னிந்தியா புறக்கணிக்கப்பட்டுள்ளது

திரைப் படத்துறையாளர் கண்டனம்

சென்னை, அக். 30—

மாஸ்கோவில் நடைபெற்ற இந்தியத் திரைப்பட விழாவில் கலந்துகொள்வதற்காக அனுப்பப்பட்ட தூதுக்குழுவில் தென்னிந்தியத் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்பதைக் குறித்து வருத்தம் தெரிவித்து, தென்னிந்தியத் திரைப்படப் பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

டில்லியின் கருணையே கருணை!

உழவு இயந்திரங்கள் வாங்குவதற்கு சென்னைக்கு ரூ. 5 இலட்சம் உதவியாம்!

சென்னை, அக் 31—

அதிக உணவுப் பொருள் உற்பத்தித் திட்டத்தின் கீழ், சென்னை மாநிலத்திற்கு 1956—57 நடைமுறை ஆண்டில், 27 உழவு இயந்திரங்களை வாங்குவதற்காக ரூ. 5 இலட்சம், இந்திய அரசாங்கம் உதவியளித்துள்ளது.

இந்த இயந்திரங்களை வாங்க விரும்புவோர்களுக்கு ரூ 20000 மட்டும் உதவியளிக்கப்படும். அதற்கு மேற்பட்ட தொகையை அவர்களே ஈடுசெய்துகொள்ள வேண்டும்.

ரூ. 427 கோடி செலவில் 44-மின்சாரத் திட்டங்கள்

புதுடில்லி, நவ. 1—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 427 கோடி செலவில் 44 மின்சாரத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1961-ல் 35 இலட்சம் கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ரூ. 10கோடி செலவில் 4 திட்டங்கள்; ரூ 5 கோடியிலிருந்து ரூ. 10 கோடிவரை செலவுள்ள 18 திட்டங்கள்; ரூ. 1 கோடியிலிருந்து ரூ. 5 கோடி வரை செலவுள்ள 12 திட்டங்கள்; ரூ. 1 கோடி செலவுக்குக் குறைவான 25 திட்டங்கள்; 19 அனல் மின்சார திட்டங்கள் இதில் அடங்கியுள்ளன.

ரூ. 3 லட்சம் செலவில்!

தோட்டங்கள் முன்னேற்றத்திற்கு மூன்று திட்டங்கள்

புதுடில்லி, அக். 30—

இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தில், தோட்டங்களின் முன்னேற்றத்திற்காக ரூ. 3 இலட்சம் செலவில் மூன்று திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அழகுக்காகப் பயன்படும் மலர்கள், இலைகளை வளர்ப்பதற்காக ரூ 1,50,000 செலவிடும் ஒரு திட்டம் இதில் அடங்கியுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட விதைகளைக்கொண்டு பூச்செடிகள், புல், மலர் வகைகள் வளர்க்க ரூ. 1 இலட்சம் செலவில் மற்றொரு திட்டம் இதில் அடங்கியுள்ளது.

ரூ. 138 கோடி செலவில்

துர்க்காபூரில் எஃகுத் தொழிற்சாலை நிறுவுவதற்கு ஒப்பந்தம்

புதுடில்லி, அக். 31—

13 ஆங்கிலக் கம்பெனிகளின் கூட்டு நிறுவனமாகிய இந்திய எஃகுத் தொழில் நிறுவனத்துடன், துர்க்காபூரில் இரும்பு—எஃகுத் தொழிற்சாலை ஒன்று நிறுவ இந்திய அரசாங்கம் ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்தத் திட்டத்திற்காக ரூ. 115 கோடி ஒதுக்கப்பட்டது; மேலும் ரூ. 23 கோடி இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

12 ஆண்டுகளுக்குப் பிறகு பசும்பால்!

நவம்பர் முதல் தேதி முதல் பம்பாய் மாநிலத்தில் உள்ள எல்லா சிற்றுண்டிச் சாலைகளிலும் டீ, காப்பி முதலியவைகளுக்குப் பசும்பால் பயன்படுத்தப்படும்.

1944-ம் ஆண்டில் ஏற்பட்ட பசும்பால் நெருக்கடியைத் தவிர்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டு, எல்லாச் சிற்றுண்டிச் சாலைகளிலும், வெளிநாட்டிலிருந்து வரும் டின்களில் அடைக்கப்பட்ட பால் தான் உபயோகப்படுத்தப்பட்டு வந்தது.

புகையிலை ஏற்றுமதி அதிகரிக்கிறது

ஆனால் விளைச்சல் குறைந்தது

புதுடில்லி, அக். 29—

1953—54ம் ஆண்டில் 69 மில்லியன் டன் புகையிலை ஏற்றுமதி செய்யப்பட்டது; 1954-55ல் 72·8 மில்லியன் டன் புகையிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது; இதன் மூலம் இந்தியாவுக்கு 10 கோடி ரூபாய் கிடைத்துள்ளது.

இதேபோன்று உள்நாட்டு உபயோகத்திலும்கூட புகையிலை அதிகரித்துள்ளது; 1953—54ல் 529 மில்லியன் பவுண்டுகளும், 1954—55ல் 565 டன்களும் உள்நாட்டிற்குத் தேவைப்பட்டுள்ளது.

ஆனால் புகையிலை பயிரிடும் விளைச்சல் நிலை குறைந்துவிட்டது. 1953—54-ல் 9 இலட்சம் ஏகர் நிலத்தில் புகையிலை பயிர் செய்யப்பட்டது. 1954—55-ல் 8,60,000 ஏகர் நிலத்திலேயே புகையிலை பயிர் செய்யப்பட்டது. பருவநிலையே இந்தக் குறைவுக்குக் காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

ரூ. 4 கோடி தர்ம சொத்துக்கள் நாட்டுக்குப்பயன்படும்

கல்வி, மருத்துவத் துறையில் செலவழிக்கப்படும்

பம்பாய் மாநிலத்தில், தர்ம நிறுவனங்களின் பெயரால், பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடக்கும் ரூ. 4 கோடி நாட்டு மக்களுக்கு உதவும் வகையில் பல நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்று தெரிகிறது.

பம்பாய் மாநிலத்தின் தர்ம நிறுவன ஆணையாளர் இந்தப் பொறுப்பை ஏற்று நடத்துவார்.

350 தர்ம நிறுவனங்களின் கடந்த 15 மாத காலத்து கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டது.

தர்மச் சொத்துக்கள் பெரும்பாலும் குவிந்து கிடப்பதற்கு முக்கிய காரணம், தர்மகர்த்தாக்கள் தகுந்த அக்கரை காட்டாமல் இருந்ததே என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கல்வி வசதிக்கும், மருத்துவ வசதிக்கும் முடங்கிக் கிடக்கும் தர்மச் சொத்துக்கள் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கோயில் நிதிகள்

வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுமா ?

சென்னை சர்க்காரிடம் இந்த யோசனை இல்லையாம்!

'வேறு காரியங்களுக்குக் கோயில் நிதிகளைப் பயன்படுத்த உத்தேசிக்கப்படுகிறதா?' என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, 'சென்னை சர்க்காரிடம் இந்த யோசனை இல்லை; மத்திய சர்க்கார் இதுபற்றி யோசித்து வருகின்றனர்' என்று இந்துமத நிறுவனத் தர்மப் பரிபாலன கமிஷனர் கூறியதாக பத்திரிகைச் செய்தியொன்றில் காணப்படுகிறது.

ஆள் தேடும் படலம் ஆரம்பமாகிவிட்டது!

இந்தி கற்கும் மாணவர்களுக்கு உதவி அளிக்க டில்லி முடிவு

சென்னை மாநிலத்தில் பத்தாவது வரை படித்து, மேற்கொண்டு இந்தியை ஒரு பாடமாகக் கற்க முடிவு செய்யும் மாணவர்களுக்கு மத்திய அரசாங்கம் உதவியளிக்க முடிவு செய்துள்ளது.

இப்படி உதவிபெற விரும்புவோர், படித்து முடித்தவுடன் மூன்று ஆண்டுகள் மாநில அரசாங்க விருப்பப்படி உழைக்க ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமாம்!

லாமாக்களுக்கு எதிராகச் சதித் திட்டம்

மத வெறியர்களின் விரோத மனப்பான்மை

காட்மண்டு, அக் 30—

திபெத்தில் உள்ள தலாய்லாமா, பஞ்சன் லாமாக்கள் இன்னும் சில ஆண்டுகளுக்கு, வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்ய மாட்டார்கள்.

புத்தரின் 2,500-ம் ஆண்டு விழாவிற்கும், காட்மண்டுவில் நடைபெற இருக்கும் 4-வது உலக புத்த நெறி மாநாட்டிக்குங்கூட அவர்கள் வரமாட்டார்கள் என்று தெரிகிறது.

இதற்கு முக்கிய காரணம், அவர்கள் கடந்துவரவேண்டிய பாதையில், மதவெறி பிடித்தவர்களும், அவர்களின் கையாட்களும் இருப்பதாகவும், சமயம் பார்த்து லாமாக்களைக் கைது செய்து, ஒழித்துக்கட்டி, புத்தமதத்தை தொலைத்துவிட சதித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

நவம்பர் 15ல் இந்தியா முழுவதும் நடைபெறும்

அகில இந்திய துறைமுகத் தொழிலாளர் சங்கத்தின் விசேட மாநாடு கல்கத்தாவில் நடைபெற்றது.

தொழிலாளர்களின் கூலிஉயர்வு கோரிக்கையை இதுவரை இந்திய அரசாங்கத் தொழில் அமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை. நவம்பர் 7-ந் தேதியன்று கலந்து பேச விரும்புவதாக இந்திய அரசாங்கம் செய்துள்ள முடிவினால் தொழிலாளர்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படாது என்று மாநாடு கருதுவதால், நவம்பர் 15-ந் தேதியன்று இந்தியா முழுவதும், துறைமுகக் கப்பலில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற ஒரு கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

வட அமெரிக்க நிபுணர்கள் இந்தியா வருகை

கைத்தறித் துணிகள் உற்பத்தி பற்றி சிபாரிசுகள் செய்வராம்

வட அமெரிக்காவுக்கு இந்திய கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இந்திய சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்காக, அமெரிக்கக் கைத்தறி நிபுணர்கள் மூவர் கொண்ட குழு ஒன்று இந்தியாவுக்கு வருகிறது.

இந்தியாவில் தற்போது உற்பத்தி செய்யப்பட்டுவரும் கைத்தறி துணிகள் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு எவ்வளவு தூரம் தகுதி உள்ளவை—ஏற்றுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் உற்பத்தியை மாற்றியமைப்பது—உற்பத்தியைப் பெருக்குவது ஆகிய விஷயங்கள் பற்றி ஆராய்ந்து அவர்கள் சிபாரிசுகளைச் செய்வார்கள்.

ஒப்பந்தம் நீடிக்கிறது!

புதுடில்லி, அக் 30—

இந்தியாவிற்கும் - பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்ட வியாபார ஒப்பந்தம் அக்டோபர் 3-ந் தேதியோடு முடிவடைகிறது; தற்போது அதன் ஆயுட்காலம் 31—1—57 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பட்டாசுக் கடையில் தீ விபத்து!

இருவர் பலி; ரூ. 1 இலட்சம் பாழ்!

வாணியம்பாடி நகரில் உள்ள சவுளிக்கடை வீதியில் உள்ள 'மணி ஸ்டோரி'ல், கடந்த 30-ந் தேதியன்று இரவு சுமார் 8 மணிக்குத் தீ விபத்து ஏற்பட்டு, அதன் விளைவாக இரண்டு பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

அந்தக் கடையில், துணி வகைகள், புத்தகங்கள், குடைகள், மற்றும் சில பொருட்களுடன், பட்டாசு வகைகளும் வைக்கப்பட்டிருந்தன என்றும், பட்டாசுகள் வாங்க வந்தவர்களுக்குப் பரிசோதனை செய்துகாட்டுவதற்காகப் பட்டாசு ஒன்றைக் கொளுத்தின போதே இத்தீவிபத்து ஏற்பட்டது என்றும் கூறப்படுகிறது.

தீ விபத்து ஏற்பட்டதும், குடியாத்தம், வேலூர், திருப்பத்தூர் தீயணைக்கும் படையினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. இதனிடையில் கிராம மக்களும், போலீசாரும் கூடித் தீயை அணைக்க முற்பட்டனர். அருகிலிருந்த துணிக்கடைகளிலிருந்தெல்லாம் பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டன. இரவு 9 மணிக்குத் தீயணைக்கும் படையினர் வந்து 3 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

விபத்துக்குள்ளான அக்கடையை இறுதியில் சோதனையிடுகையில், அக்கடை முதலாளியின் மகன் ஒருவரும், குமாஸ்தா ஒருவரும் இறந்து கிடந்தனர்.

இவ்விபத்தினால் சுமார் 1 இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் எனத் தெரிகிறது. (ந. கி.)

சென்னை சட்டசபை

கட்சிவாரியாக உறுப்பினர்கள் எண்ணிக்கை

புதிய மாகில அமைப்பு உருவாகிவிட்டபின்னர், சென்னை சட்டசபையின் நிலை வருமாறு :—

சட்டசபையில் பிரஜா-சோஷலிஸ்டுகளோ, முஸ்லீம் லீக் உறுப்பினர்களோ ஒருவர்கூட இருக்க மாட்டார்கள்.

சென்னை மாகிலத்துடன் இணைக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து அடுத்தப் பொதுத் தேர்தலுக்குப் பிறகே உறுப்பினர்கள் சட்டசபையில் இடம் பெறுவார்கள்.

தற்போது சென்னை சட்டசபையில் மொத்தம் 190 உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்களில் காங்கிரஸ் கட்சியினர் 133; திராவிட பார்லிமெண்டரி கட்சியினர் 22; கம்யூனிஸ்டுகள் 17; சுயேச்சைகள் 5; கே. எம். பி. 3; பார்வர்ட்பிளாக் 3; சோஷலிஸ்டுகள் 3; தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் 2; நீதிக் கட்சி 1; தமிழ் நாடு உழைப்பாளர் கட்சி 1—ஆக 190 பேர் இருப்பார்கள்.

சட்டசபைத் தலைவர் கோபால மேனன் கேரளம் சென்றுவிட்டபடியால் பதவியை இழந்துவிட்டார்.

ஒப்பந்தம் நீடிக்காது!

20—7—53ல் இந்தியாவுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட பண சம்பந்தமான ஒப்பந்தம் 30—6—57ந் தேதியுடன் முடிவடைகிறது. அந்தக் கால கெடுவுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது என்று தெரிகிறது.

******* ******************* ***-****

தேர்தல் நிதி தாரீர்!

★

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே! பொதுத் தேர்தல் நெருங்குகிறது! மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது! பொதுத் தேர்தலில் ஈடுபடுதலாகிய மக்களாட்சி முறைமையைத் தூய உள்ளத்தோடும், நேரிய செயல் முறையோடும் நிறைவேற்றுவதென்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்!

அடுத்துவரும் பொதுத் தேர்தலில், 150 தொகுதிகளில் தி. மு. கழகம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்று, நாடெங்கும் சுற்றி விவரம் அறிந்துவந்துள்ள தேர்தல் ஆய்வுக்குழு, சுவையான செய்தியைத் தந்துள்ளது. இந்தச் சுவையான செய்தியைச் செயலாக்கிக் காட்ட, இலட்சக்கணக்கிலே பொருள் தேவைப்படுகிறது. கழகத் தோழர்கள் தேர்தல் களத்திலே விறுநடை போட்டு வெற்றிஉலா வரவேண்டுமானால், தொகுதி தோறும் செய்யப்பட வேண்டிய அடிப்படை நியாயமான செலவுகளுக்கே ஆயிரக்கணக்கில் ஆகும்.

எனவேதான், இச்சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த மத்திய செயற்குழு, தேர்தல் பணியை நிறைவேற்ற, குறைந்த அளவு ரூபாய் ஐந்து இலட்சம் தேவையென்று மதிப்பிட்டது.

சிறுதுளி பெருவெள்ளம்!

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பெருமுயற்சி எடுத்து, கைநிறைய காசுகளை அள்ளியள்ளி வழங்குவார்களேயானால், கழகம் எதிர்பார்க்கும் ரூபாய் ஐந்து இலட்சம் விரைவிலே சேர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

கிளைக் கழகங்கள், ஆங்காங்கு முறைப்படி முயற்சி எடுத்துத் நிதி திரட்டி, திரட்டிடும் தொகையைச் சேரச்சேர அவ்வப்போது நேரே தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாவட்டச் செயலாளர்கள், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களை அவ்வப்போது தூண்டி, நிதி சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியில் துணைபுரியுமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனி அமைப்புகளும், தனிப்பட்ட தோழர்களும் தனித்தனியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் தேர்தல் நிதியும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் நெருங்குகிறது!
பொறுப்பு மிகுகிறது!
கடமையை விரைந்து செய்ய வாரீர்!—வாரீர்!!

வணக்கம்

'அறிவகம்'
சென்னை-13
31-11-56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

குறிப்பு:—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

****

சென்னை-ஆசீர்வாதபுரத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

மனோகரன், சத்தியவாணிமுத்து சொற்பொழிவு

30—10—56 இரவு 7½ மணியளவில் சென்னை ஆசீர்வாதபுரம் (பிரபாத் டாக்கீஸ் அருகில்) 10வது வட்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் வி. சி. தமிழ்தாசன் தலைமையில் நடைபெற்றது.

தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள் கழகத்தின் நிலைமையையும், காமராசர் வட்டாரத்தின் சூழ்நிலைகளையும் விளக்கி சிறிதுநேரம் பேசிய பின்னர், தோழர் கி. மனோகரன் அவர்கள், கழகத் தேர்தல் முடிவைக் குறித்தும், அதுகண்டு பொருத காமராசரின் பண்பற்ற தன்மையை விளக்கியும், இன்றைய அரசியல் நிலைகளை தெளிவாக எடுத்துச் சொல்லியும், நேருவின் சர்வாதிகாரத் தன்மையை விவரித்தும், அவரின் தனிநபர் வழிபாடு முறையைக் கண்டித்தும், கழகத்தின் ஜனநாயகப் பண்பை விளக்கியும் அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

செயலாளர் நன்றி கூற கூட்டம் இரவு 10½ மணியளவில் முடிவுற்றது.

கூட்டம் நடத்த அனுமதி கிடைக்காததால் கூட்டம் தாமதமாக இரவு 7½ மணி யளவில்தான் துவங்கிற்று.

மாலை 5 மணியிலிருந்தே குழுமி விட்ட ஆயிரக்கணக்கான மக்கள் இரவு 10½ மணிவரையில் ஆர்வமுடன் குழுமியிருந்து கருத்துரை கேட்டுச் சென்றனர். (ச. - கி.)

வள்ளுவர் மன்றத்துவக்கம்

14—10—56 மாலை 6 மணிக்கு அச்சரபாக்கம் கிராமத்தில், மேற்படி துவக்க விழா, திரு பி. வி கோபால் தலைமையில் நடைபெற்றது. திரு. வீ. முனுசாமி எம். பி. அவர்கள் மன்றத்தைத் திறந்துவைத்துப் பேசினர்; தோழர்கள் பலர் குறள் பற்றிப் பேசினர்; தோழர் மீராசா நன்றி நவின்றார்.

இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

திருமணங்கள்

23—10—56-ல், சென்னை—சேப்பாக்கம் அருணாசல ஆச்சாரி தெரு, 13-ம் இல்லத்தில், தோழர் க அப்பாதுரை அவர்கள் தலைமையில் தோழர் ஏ. சாமிக்கண்ணு—தோழியர் மங்கம்மாள் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் கே. எம். கண்ணபிரான், மு. புரட்சிமணி, பொ. எழுமலை, தோழியர் அலமேலு-அப்பாதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

18—10—56 காலை 9 மணிக்கு, புதுவை—உழவர்கரைக் கொம்யூன் சாலையூரில், தோழர் மு பழனிராசு—தோழியர் பெ. இராசாமணி திருமணம், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வாணிதாசன், அ. பொன்னம்பலனார் ஆகியவர்கள் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

18—10—56-ல், சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் கிழக்கு இராசபாளையம் தோழர் செல்லப்பிள்ளை—தோழியர் வள்ளியம்மை திருமணம், தோழர் எம் பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1—1—0 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

[அன்பளிப்புத் தொகைகள் யாவும் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.]

பிறப்பு

குடந்தைத் தோழர் மா. சாந்தி அவர்களது துணைவியார் ருக்மணி அவர்கள் 12-10-56ல் ஒரு பெண் மகவுக்குத் தாயானார்; இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

மதுரை 'இளங்கோ மன்ற'ச் செயலாளர் தோழர் மு. சந்தானம் அவர்களது துணைவியார் இராசம்மாள் அவர்கள், ஓர் ஆண் மகவுக்குத் தாயானார் இதன நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

துறையூர் தோழர் து. பெ. சவுந்திரராசன் அவர்களின் துணைவியார் தனலெக்குமி அம்மையார் 17—10—56ல் ஓர் மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

ஆயக்குடித் தோழர் மு. சுப்பிரமணியம் அவர்களது துணைவியார் 10—10—56ல் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்; குழந்தைக்கு 'அழகிரி' என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

[அன்பளிப்புகள் வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.]

அன்பளிப்பு

அச்சரப்பாக்கம் வள்ளுவர் மன்றத்தாரால் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

ஃ ஃ ஃ

தெ. ஆ. மாவட்டம் பஞ்சமாதேவி கே. வி. கே. சாமி படிப்பகத்தின் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1. அன்பளிப்பாகத் தரப்பட்டது.

(அன்பளிப்புகள் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்)

பெயர் சூட்டல்

சென்னை—திருவல்லிக்கேணியில், 29-10-56 அன்று ஆமதாபாத் தி. மு. கழகச் செயலாளர் தணிகாசலம்—பங்கஜம் அவர்களின் குழந்தைக்கு அண்ணா அவர்கள் 'அன்பழகன்' எனப் பெயரிட்டார்; அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1-ம், தேர்தல் நிதிக்கு ரூ. 1-ம் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

தேர்தல் நிதி

சிங்கப்பூர் (மலேயா) தோழர் கே. பி. கைலாசம் அவர்களிடமிருந்து ரூ. 10-ம், தோழர் சி. சிங்காரம் அவர்களிடமிருந்து ரூ. 15-ம் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென வரப்பெற்றோம்.

* * *

சென்னை தி. மு. க. தோழர் காஞ்சி—கலைப்பிரியன் கந்தசாமி அவர்கள் 1—11—56 அன்று தி. மு. க. தேர்தல் நிதிக்காக ரூ. 10. அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

—தி. மு. க. தலைமை நிலையம்

சேதி, கேட்டீரா!

அலகாபாத், அக் 30—

'பெண்கள் சங்க'க் கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில், பண்டித நேருவின் தங்கை பண்டித விஜயலட்சுமி, 'பெண்கள்' என்று கூறப்படுவது உலகில் வெறுக்கப்படுகிறது என்றும், எனவே, 'மாதர் சங்கம்' என்று பெயரை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டாராம்!

‘உடனே போரை நிறுத்த வேண்டும்’

ஐ. நா. சபையில் தீர்மானம்

நியூயார்க், நவ. 2—

சூயஸ் கால்வாய்ப் பகுதியில் பிரிட்டிஷ்—பிரெஞ்சு, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் இராணுவ நடவடிக்கைகளைப் பற்றி கவலை தெரிவித்தும், உடனடியாக அங்கு போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா கொண்டுவந்த ஒரு தீர்மானத்தை ஐ. நா. பொதுச் சபையின் அவசரக் கூட்டம் பெருவாரியான ஓட்டுகளால் நிறைவேற்றியது.

தீர்மானத்தை ஆதரித்து 64 ஓட்டுகள் கிடைத்தன; எதிர்த்து 5 ஓட்டுகள் மட்டுமே கிடைத்தன—(பிரிட்டன், பிரான்சு, இஸ்ரேல், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா)

ஐ. நா. என்ன செய்யும்?

போர் நிறுத்தம் கோரி ஐ. நா. நிறைவேற்றிய தீர்மானம் நான்கு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

ஒரு நியாயமான காலவரம்புக்குள் பதில் எதிர்பார்க்கப்படுகிறது; அதற்குள் பதில் கிடைக்காவிட்டால், வேறு வழிபற்றி ஐ. நா. ஆராயும்.

அவகாசம் வேண்டுமாம்

லண்டன், நவ. 2—

“மத்தியக் கிழக்கில் போரை நிறுத்தவேண்டும் என்று ஐ. நா. நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தை ஆராய்ந்து முடிவு செய்ய போதிய அவகாசம் வேண்டும்” என்று பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் காமன்ஸ் சபையில் அறிவித்துள்ளார்.

“அதுவரையில் போரை நிறுத்திடவும் வைக்கமுடியாது” என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

லண்டனில் ஆர்ப்பாட்டம்

மத்தியக் கிழக்கு நிலைமை குறித்து விவாதம் நடைபெற்ற போது பார்லிமெண்டு மாளிகைக்கு முன்பு மக்கள்கூடி, ‘சமாதானம் தேவை’ ‘ஈடன் விலகவேண்டும்,’ ‘யுத்தத்தை நிறுத்தவேண்டும்’ என்பனபோன்ற கோஷங்களை எழுப்பினர்; பலர் கைது செய்யப்பட்டனர்.

கிளர்ச்சி நடைபெறுமா?

எகிப்துமீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையைக் கண்டித்து பிரிட்டிஷ் தொழிற் கட்சி, தொழிற் சங்கக் கவுன்சில் கூட்டுறவு யூனியன் ஆகிய மூன்று நிறுவனங்களின் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:—

“பிரிட்டிஷ் நடத்தை பெரிய அதிர்ச்சி தருகிறது; லண்டனிலும் மற்ற இடங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற வேண்டும்.”

காரணம் அதுதான்!

எகிப்தியப் படைகள் சினாய் தீபகற்பத்திலிருந்து மொத்தமாக வாபஸ் பெறப்பட்டிருப்பதாகவும், அவைகள் சூயஸ் கால்வாய்ப் பகுதியில் பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகளை எதிர்க்கும் என்றும் நாசர் அறிவித்துள்ளார்.

சூயஸ் கால்வாயைக் கைப்பற்ற முடிவு?

பாரிஸ், நவ. 2—

“சூயஸ் கால்வாய்ப் பகுதியைத் தற்காலிகமாகக் கைப்பற்றுவதற்கு வேண்டிய நிலைமையை தோற்றுவிக்க தீவிர நடவடிக்கைகள் இனி மேற்கொள்ளப்படும்” என்று பிரெஞ்சுத் தற்காப்பு இலாகா அறிவித்துள்ளதாம்.

இந்தியாவின் கவலை

சூயஸ் கால்வாய் அடைக்கப்பட்டிருப்பதால் டில்லியில் கவலை ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெறாத நிலை ஏற்பட்டுவிடுமோ என்று இந்திய அரசாங்கம் அஞ்சுவதாகத் தெரியவருகிறது.

கேரளத்தில் கவர்னர் ஆட்சி!

புதுடில்லி, நவ 1—

இந்தியாவின் குடியரசுத் தலைவர், புதிய கேரள மாநிலத்தில் நிர்வாகப் பொறுப்பை பிரகடனம் ஒன்றின் மூலம் தான் ஏற்றுக்கொண்டிருப்பதுடன், நிர்வாக அதிகாரங்களை மாநில கவர்னருக்குத் தந்து உத்தரவும் பிறப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இப்போது, இராசப்பிரமுகரின் ஆலோசகராயிருந்த பி. எஸ். ராவ், தற்காலிகக் கவர்னராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டு ஆட்சி நடத்திவருகிறார்.

புதிய மாநில அமைப்புகள்

புதிய மைசூர் மாநிலத்தை, குடியரசுத் தலைவர் இராசேந்திரர் ஆரம்பித்துவைத்தார்.

மைசூர் முன்னாள் இராசப்பிரமுகர், மாநிலத்தின் கவர்னராகப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்; 12-பேரடங்கிய நிசலிங்கப்பாவின் அமைச்சரவை பதவியேற்றது.

ஆந்திரம் :

சஞ்சீவி ரெட்டி தலைமையில் 12 பேர் கொண்ட புதிய ஆந்திர மாநில அமைச்சரவை பதவியேற்றது; கவர்னர் திரிவேதி விசுவாசப் பிரமாணம் செய்துவைத்தார்.

மத்தியப் பிரதேசம் :

கவர்னர் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, பண்டிட் சுக்லாவை தலைவராகக்கொண்ட புதிய அமைச்சரவைக்கு விசுவாசப் பிரமாணம் செய்வித்தார்.

பம்பாய் :

சாவன் தலைமையில் 14 பேர் கொண்ட இருமொழி பம்பாய் மாநில அமைச்சரவை பதவியேற்றது.

கேரளம் :

பி. எஸ். ராவ் இன்று தற்காலிகக் கவர்னராகப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். சென்னை நிதியமைச்சர் சுப்பிரமணியம் விழாவில் கலந்துகொண்டார்.

ரூ. 15 லட்சம் மிச்சம்

புதுடில்லி, நவ. 1—

மாநிலப் புது அமைப்பை ஒட்டி, இராசப்பிரமுகர் பதவி ஒழிக்கப்படுவதினால், டில்லி சர்க்காருக்கு ஆண்டுதோறும் ரூ. 15 இலட்சம் மிச்சப்படுமாம்.

நாற்றுவரை, இராசப்பிரமுகர்களுக்காகவும் கவர்னர்களுக்காகவும் சுமார் ரூ. 60 இலட்சம் வரை செலவிட்டு வந்தனராம்!

எண்ணெய்த் தொழிலாளர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்

பஹ்ரீன் தீவிலுள்ள பிரிட்டிஷ் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையில் வேலை செய்யும் அரபுத் தொழிலாளர்கள், எகிப்துக்கு ஆதரவு காட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனராம்.

வெட்கம்! வெட்கம்!!

லண்டன், நவ. 2—

“ஆங்கிலோ - பிரெஞ்சு வாதிகள் மத்தியக் கிழக்கில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பைத்தியக்காரத்தனமானவையாகும்; அது கண்டு நான் மிகவும் வெட்கப்படுகிறேன்,” என்று பெர்ட்ரண்டு ரசல் கூறியிருக்கிறார்.

சென்னையில் தடையுத்தரவு

சென்னை, நவ. 2—

எகிப்து ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாகவும், தொழிலாளர்களின் அமைதியின்மை காரணமாகவும், நவ. 2-ந் தேதி முதல் டிசம்பர் முதல் தேதி வரை சென்னையில் கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் நகர போலீஸ் கமிஷனர் தடை உத்தரவு விதித்துள்ளார்.

கண்ணதாசன்

சேலம் நிகழ்ச்சிகள்

4—11—56 காலை 9-30 மணிக்கு—செவ்வாய்ப்பேட்டை (அங்காளம்மன் கோவில் தெரு) 6-வது வட்டம் தி. மு. கழகத் திறப்பு விழா.

மாலை 4-மணிக்கு—மாவட்டம்—நகரக் கழகங்களின் அலுவலகத் திறப்புவிழா—(சென்ட்ரல் டாக்கீசுக்கு எதிரில்)

மாலை 6-30 மணிக்கு — அம்மாப்பேட்டை, வீரசேனியர் தெருவில் 23-வதுவட்டக் கழகச் சார்பில் பொதுக்கூட்டம்.

இந்நிகழ்ச்சிகளில் தோழர்கள் வி. சிவப்பிரகாசம், ஈ. ஆர். கிருஷ்ணன், சிற்றுளி-சுப்பிரமணியம், எஸ். பி. சின்னையன் ஆகியோர் பேசுவர்.

ஹங்கேரி ‘புரட்சி’யை ஒடுக்க!

மேலும் ரஷ்யத் துருப்புகள் நகர்கின்றனவாம்

வியன்னா, நவ. 2—

ஹங்கேரியில் ‘புரட்சி’யில் ஈடுபட்டிருக்கும் ‘சக்தி’களை ஒடுக்குவதற்காகப் பெரும் அளவில் ரஷ்யாவிலிருந்து துருப்புகள், புதாபெஸ்ட் நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாக இங்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

மேலும், ருமேனியா வழியாகவும் ரஷ்யத் துருப்புகள் ஹங்கேரி நாட்டுக்குள் வேகமாக நகர்ந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

பயங்கர ஆயுதந்தரித்தத் துருப்புகள் செக்கோசுலோவேக்கியா—ஹங்கேரி எல்லை வழியாகவும் ஹங்கேரிக்குள் நுழைந்துகொண்டிருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது.

ரஷ்யத் துருப்புகள் உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டும் என்பதற்கான முயற்சியில் ஹங்கேரி ஈடுபட்டிருக்கும் போது, ரஷ்யத்துருப்புகள் மேலும் ஹங்கேரிக்குள் குவிவது பலருக்கும் அதிருப்தியையும் கவலையையும் தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஹங்கேரி ஆட்சேபிக்கிறது

தொடர்ந்து ரஷ்யத் துருப்புகள் ஹங்கேரிக்குள் நுழைவதை ஆட்சேபித்து, ஹங்கேரி, ரஷ்யாவிடம் மூன்று ஆட்சேபக் குறிப்புகளைத் தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

41 ரிசர்வ் தொகுதிகளுக்கு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் போட்டியிடும்

காங்கிரஸ் எதிர்ப்பாளர்களுடன் தொடர்புகொள்ளுவர்

“தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், பொதுத் தேர்தலில், சென்னை மாநிலத்திலுள்ள 36 சட்டசபை ரிசர்வ் தொகுதிகளுக்கும் 5 பார்லிமெண்ட் ரிசர்வ் தொகுதிகளுக்கும் ஆக 41 ரிசர்வ் தொகுதிகளில் காங்கிரசை எதிர்த்து அபேட்சகர்களை நிறுத்தித் தேர்தலில் போட்டியிடும்.

“அபேட்சா பத்திர மனுக்கள், ‘தலைவர், தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன், 18, காக்ரேன் பேசின் ரோட், சென்னை-21’ என்ற முகவரிக்கு 30—11—’56-ந் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும்.

“பெடரேஷன் காரியக் கமிட்டி 16—12—56ல், சென்னை, 18, காக்ரேன் பேசின் ரோடிலுள்ள அலுவலகத்தில் கூடி, 15 நாள் தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்து தகுதி வாய்ந்த அபேட்சகர்களை ரிசர்வ் தொகுதிகளுக்குத் தேர்ந்தெடுக்கும்.

“30—9—56ல், டாக்டர் அம்பேத்கார் தலைமையில் டில்லியில் கூடிய அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் தீர்மானித்ததுபோல, காங்கிரசை எதிர்க்கும் ஏனைய கட்சிகளோடு பெடரேஷன் தேர்தல் தொடர்பு கொள்ளும்”

என்று, தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் தலைவர் ஆ. இரத்தினம் எம். எல். ஏ. அவர்கள் அறிவித்துள்ளார்.

மக்கள் உரிமைக் குரல்!

பரோடாவில் அர்த்தால்

பம்பாய் மாநிலம் இரு மொழி மாநிலமாக அமைக்கப்பட்டதைக் கண்டித்து பரோடா முழுவதும் அர்த்தால் நடைபெற்றது; மகா குசராத் இயக்கத்தினர் இதை வெற்றிகரமாக நடத்தினர். மாலையில், ஊர்வலம் நடத்தப்பட்டது; பரோடா கலெக்டரிடம் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தினர்.

116 பேர் கைது

பம்பாய் இரு மொழி மாநிலமாக அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டிப்பதற்காக, கவர்னர் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம் செய்வதற்காக முயன்றவர்களைத் தடுத்து நிறுத்தியதுடன், 116 பேரைப் போலீசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள், சம்யுக்த மகாராஷ்டிரம், மகா குசராத் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்.

ஆமதாபாத்தில் வேலை நிறுத்தம்

குசராத் மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்று கோரி இங்கு 20 ஊர்வலங்கள் நடைபெற்றுள்ளது; சுமார் 20 000 தொழிலாளர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டுள்ளனர். மகாகுசராத் இயக்கத்தினர் வேலை நிறுத்த வேண்டுகோள் ஒன்று விடுத்து வெற்றி கண்டுள்ளனர்.

31 எம். எல். ஏ.-க்கள் இராஜினாமா

பீகாரில் சேர்க்கப்பட்டுள்ள முன்னாள் சமஸ்தானங்களான செராய்கல்லா, கார்ஸ்வான் உட்பட சாதர் பகுதிகளை ஒரிசாவுடன் சேர்க்கப்பட வேண்டும் என்று கோரி, ஒரிசா சட்டசபையில் அங்கம் வகிக்கும் 31 கணதந்திர பரிஷத் உறுப்பினர்கள் இராஜினாமா செய்துள்ளனர்.

ஒரிசாவுக்கு இழுக்கும், அநீதியும் இழைக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் கமிஷன் மாநாடு

அடுத்த பொதுத் தேர்தலில் வாக்கு அளிப்பதற்கான மொத்த நாட்கள், வாக்குப் பதிவு செய்யும் நேரம் ஆகியவைகளைக் குறித்து முடிவு செய்ய நவ. 12-ந் தேதியன்று புதுடில்லியில் எல்லாக் கட்சிகளுடனும் தேர்தல் கமிஷன் கலந்து பேசும் எனத் தெரிகிறது.

ஆச்சரியந்தான்!

சிறுவர்களுக்கு வானசாஸ்திரம் கற்றுத் தருவதற்காகவே தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுவதாக விநோபா பாவே கூறியுள்ளார்.

‘மக்களிடையே வேரூன்றியிருக்கும் பழைய குருட்டு நம்பிக்கைகள் மாறுவதை நானும் விரும்பி வரவேற்கிறேன்’ என்றும் அவர் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

‘தேசியக் கொடியைப் பறக்க விடாதே!’

சென்னை, நவ. 2—

குதிரைப் பந்தய நாட்களில் சென்னை ‘ரேஸ் கிளப்’ கட்டிடத்தின்மீது தேசியக் கொடியைப் பறக்கவிடக்கூடாது என்று அதன் நிர்வாகிகளுக்கு தாகீது அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சுதந்திர தினத்தன்று ‘சுதந்திர கப்’பும், கவர்னர் வழங்கும் வெள்ளிக் கோப்பைப் பந்தயங்களும் உண்டு.

20 இலட்சம் டன்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வரை கொள்ளக்கூடியவையாக இருக்கும்.

நாட்டின் மிகப் பெரிய தானியக் கிடங்கான ஹப்பூரில் மொத்தம் 10,000 டன் தானியங்களைச் சேமித்து வைப்பதற்குத் தானியக் களஞ்சியம் ஒன்றைக் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது தவிர மூட்டைகளாக மொத்தம் 15,000 டன் வரை சேமித்து வைக்க இடவசதி கொண்ட பெரிய கிடங்குகளை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டம்

★

பெரியகுளம் :

பெரியார் திடலில்

6—11—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். முத்து

குறிப்பு:—அன்றுமாலை 4-மணிக்கு தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகத்தைத் திறந்து வைப்பார். தோழர் எஸ். முத்து கழகக் கொடியேற்றுவார்.

புதிய தமிழக அமைப்பு தினப் பொதுக் கூட்டம்

4-11-56 மாலை 6 மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில், திரு. எச். டி. இராசா எம். பி., அவர்கள் தலைமையில், மேற்படி கூட்டம் நடைபெறும்; தோழர்கள் எம். ஜி. வெங்கடராமன், எஸ். இராமநாதன், எஸ். பி. ஆதித்தன், கே. அருணாசலம், வி. ஜி. இராதா கிருட்டிணன், ஜி. உமாபதி ஆகியோர் பேசுவர்.

சென்னைக் கல்விச் சங்கம்

4-11-56 மாலை 5 மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ராஹன்ஸ் ரோட் ஆண் பள்ளியில், ‘இலக்கியக் கற்பனை’ என்னும் பொருள் பற்றி திரு. கு. வே. இராமகோடி பேசுவார்.

சென்னை—வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

4-11-56 காலை 10 மணிக்கு தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில் வே. த. அருச்சுனனார், திருக்குறளில் ‘அடக்கமுடைமை’ என்ற அதிகாரத்தை விளக்கிப் பேசுவார்.

விவசாய சங்கப் பொதுக்கூட்டம்

4-11-56 பகல் 2 மணிக்கு, அரக்கோணம் டவுனில், தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் வே. அ. இளஞ்செழியன், வே. சு. பாண்டியன் ஆகியோர் ‘விவசாயிகளின் கடமை’ என்பதைப் பற்றிப் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

4-11-56 காலை 9 மணிக்கு சென்னை—குயப்பேட்டை இராமாநுசத் தோட்டத் தெருவிலுள்ள திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையில், தோழர் க. வரதன் தலைமையில் ‘தேர்தலும், பொது மக்களும்’ எனும் தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.